மென்று, இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றிலே இன்றைக்கு உருவாக்கிய பெருமை நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசுக்குத்தான். புரட்சித் தலைவி அரசுதான் செய்திருக்கிறதே தவிர, எந்த அரசும் செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக நாம் எடுத்துக்கொண்டால் இன்றையதினம் பல்வேறு கிராமங்களிலே பேருந்துகளை இயக்குகின்றபோது, அந்தப் பேருந்துகள் அந்தக் கிராமங்களுக்குச் செல்கிறபோது, ஏறத்தாழ அதை நாங்கள் ஆய்வு செய்கின்ற நேரத்தில், 24 நாட்கள் தொடர்ந்து அந்தக் கிராமத்திற்குச் சென்று திரும்பினாலும் கூட, ஒருவர் கூட அந்தப் பேருந்திலே பயணம் செய்யாத 6, 7 கிராமங்கள் அப்படியிருக்கின்றன. அதுபோன்ற கிராமங்களுக்கு நாம் பேருந்துகளை நிறுத்தினால், போராட்டங்கள் ஏற்படுகின்ற காரணத்தினாலே அதைத் தொடர்ந்து நாம் இயக்கிக்கொண்டிருக்கிறோம். நஷ்டம், இலாபம் என்கிற நோக்கத்தோடு அல்ல, மக்களுக்குப் பணியாற்றுகின்ற நல்ல அரசாக, இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டியாக திகழ்ந்து கொண்டிருக்கிற நம்முடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதைத் தொடர்ந்து செய்து கொண்டுதான் இருக்க வேண்டுமே தவிர, வேறு வழியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் தங்களுடைய பணிக்காலத்திலே அந்தப் போக்குவரத்துக் கழகத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்டவர்கள். அவர்களுக்குப் பேருந்திலே இலவசமாக செல்ல அனுமதி அட்டை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வுபெற்ற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 6 ஆண்டுகளுக்கு அவர்கள் ஓய்வு பெற்ற பிறகும் கூட இலவச பஸ் பாஸ்கள் வழங்கி அவர்கள் அதிலே பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. தா. செழியன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

9—

கிருஷ்ணாபுரத்தில் நூற்பாலை அமைத்தல்

* 19797—திரு. தா. செழியன்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 26]

(அ) பெரம்பலூர் தொகுதி, கிருஷ்ணாபுரத்தில் நூற்பாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. தா. செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியாகிய பெரம்பலூரினுடைய மையப் பகுதியில் அமைந்துள்ளது இந்த கிருஷ்ணாபுரம் என்கிற ஊர். ஏறத்தாழ 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பருத்தி பயிர் செய்யப்படுகிறது. எனவே விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக இந்த விவசாயப் பயிரையே நம்பியிருப்பதால் இங்கே அவசியம் ஒரு நூற்பாலையை ஏற்படுத்தித் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : திருச்சி மாவட்டம், கரூரில் திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஒன்று 25 ஆயிரம் கதிர்களுடன் செயல்பட்டு வருகிறது. இது மட்டுமல்லாமல் தமிழகத்தில் இன்னும் 17 நூற்பாலைகள் இருக்கின்றன. இவைகளில் 13.52 இலட்சம் கிலோ கிராம் சிட்டா நூலும், 11.52 இலட்சம் கிலோ கிராம் கோன் நூலும் ஒரு மாதத்தில் உற்பத்தி ஆகிறது. தற்போது நூல் உற்பத்தியில் தமிழகம் உபரி உள்ள மாநிலமாக இருக்கிற காரணத்தால் இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. தா. செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலை ஏற்படுவதன் மூலம் சுற்று வட்டாரத்தில் உள்ள 30 கிராமங்கள் பயன்படுகின்றன. ஆய்தறியும் அறிஞர்களினுடைய அறிவுப் பெட்டகம், மரகத மாளிகையின் மாணிக்கப் பெட்டகம், ஏழைகள் ஏற்றம் பெற வாட்டம் போக்கிட, அவர்களைத் தேடிச் சென்று நல் வாழ்வுத் திட்டங்களை நின்பொற்கரங்களால் அள்ளித் தந்திடும் ஏற்றமிகு ஏந்தலே, தங்களுடைய பொற்கால ஆட்சியில், கிருஷ்ணாபுரத்தில் ஒரு நூற்பாலை அடுத்த நிதியாண்டிலாவது ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் ஏற்கெனவே ஒரு நூற்பாலை இருக்கிறது. அதனால் இது இயலாது என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 10, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

10—

தும்மலப்பட்டி பெரிய ஓடைத் திட்டம்.

*9757—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வத்தலக்குண்டு யூனியன், தும்மலப்பட்டி அருகில் உள்ள பெரிய ஓடைத் திட்டம் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தும்மலப்பட்டி பெரிய ஓடையில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) சில தொழில் நுட்பக் குறைபாடுகளைக் களையும் பொருட்டு தல அதிகாரிகளுக்கு அந்தத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. குறைகளைக் களைந்து இறுதியாக்கம் செய்து நில நிர்வாக ஆணையரின் ஒத்திசைவைப் பெற்றதற்குப் பின்னால் அந்தத் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டைப் பகுதியைப் போன்ற வறண்ட பகுதிகளிலே மழைக்காலத்திலேயாவது வீணாகின்ற தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டுமென்று நானும் என் தொகுதி மக்களும் விரும்புகிறோம். அப்படி இருக்கும்போது இதிலே காலதாமதம் செய்யாமல், இது ஒரு சிறிய திட்டம்